மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள்.

வினா எண்கள் 101, 102 ஆகியவை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கத் தள்ளி வைக்கப்படுகின்றன.

வினா எண் 103, திரு. கி. பாரிமோகன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

103—

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

***7856—திரு. கி. பாரிமோகன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியுடன் 1975 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2003 மார்ச் 27]
தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. மேலும், இத்திட்டத்தின் மூலம் எந்தவிதப் பணிகளும் தருமபுரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவில்லை.

திரு. கி. பாரிமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலே பல்வேறு மலைப் பகுதிகள் இருந்து கொண்டு இருக்கின்றன. அரூரில் சித்தேரி மலையும், அதைப்போல, தருமபுரி பகுதியிலே வத்தல் மலை போன்ற பல்வேறு மலைப் பகுதிகளும் இருந்து கொண்டு இருக்கின்றன. தருமபுரி மாவட்டத்திலே இருக்கின்ற வத்தல் மலையிலே ஏறத்தாழ இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். மத்திய அரசு உதவியோடு நடைபெற்று வருகின்ற உண்டு உறைவிடப் பள்ளி; அதைப்போல சாலை வசதி; இன்னும் இருக்கின்ற பல சலுகைகள் எல்லாம் அங்கே எதுவுமே செய்யப்படாமல் இருந்து கொண்டு இருக்கின்றன. சமீபத்திலேகூட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 26 கிலோ மீட்டர் நடந்து சென்று மக்கள் குறை கேட்கும் முகாமை நடத்தினார்கள். அங்கே பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். அவரும் நடவடிக்கை எடுப்பதாக இந்த மாநில அரசுக்குப் பரிந்துரை அனுப்பி இருக்கிறார். அந்த வகையிலே வத்தல் மலையிலே உண்டு உறைவிடப் பள்ளி அமைக்கவும், சாலை வசதி ஏற்படுத்தித் தரவும், அங்கே இருக்கின்ற துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்கித் தரவும் மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் உள்ள மலைப் பகுதிகள் மட்டுமல்ல, ஏலகிரி மலை, ஜவ்வாது மலை, பச்சை மலை, கொல்லி மலை போன்ற பல பகுதிகளும் இத்தகைய மேம்பாட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டிய கட்டாய நிலை இருக்கிறது. இது குறித்து மைய அரசிடம் மாநில அரசு எடுத்துச் சென்று, தக்க நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பல்வேறு மலைப் பகுதிகள் இருக்கின்றன என்றும், அவற்றையெல்லாம் மலைப் பகுதி

மேம்பாட்டுத் திட்டத்திலே சேர்ப்பதற்கு முயற்சிகள் எடுப்பதாகவும் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக, தமிழ்நாட்டிலே சேலம் மாவட்டம், தருமபுரி, வேலூர், இன்னும் பல்வேறு மாவட்டங்களிலே மலைப் பகுதிகளிலே மலைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆக, இப்படி மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பகுதிக்கு மத்திய அரசால் முன்னுரிமை வழங்கப்படுகிறது. அதிலும், கடந்த காலங்களிலே 10,000 மக்கள் தொகை என்று வைத்து இருந்தார்கள். இப்போது அந்த 10,000 மக்கள் தொகை என்பதைக்கூடக் குறைத்துவிட்டதாகவும் அல்லது விதிவிலக்கு அளித்துக் கொடுப்பதாகவும், முன்னுரிமை வழங்குவதாகவும் சொல்கிறார்கள். அந்த வகையிலே, மலைப் பகுதியை மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டும். அதிலும் குறிப்பாக, மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பகுதியைக் கட்டாயம் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு அரசு இணைந்து நடவடிக்கை எடுக்குமா, அதற்குண்டான விதிமுறைகளைத் தளர்த்துவதற்கும் முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், அந்தப் பகுதியிலே வாழ்கிற மலைவாழ் மக்களினுடைய மேம்பாட்டையும் உள்ளடக்கியதாகத்தான் இருக்கும். அப்படித்தான் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில்தான், மலைவாழ் மக்கள் வாழ்கிற பிற பகுதிகளான கொல்லி மலை, ஏலகிரி மலை, பச்சை மலை, பவள மலை போன்ற பல்வேறு பகுதிகளையும் இதற்கு உட்படுத்த வேண்டும் என்று மைய அரசுக்கு மாநில அரசு எடுத்துச் செல்லும். தக்க நடவடிக்கை எடுக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. பாரிமோகன்.

திரு. கி. பாரிமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் மலைப் பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள் எல்லாம் Scheduled Tribes என்று சொல்லப்படுகின்ற மலை ஜாதி மக்கள்தான். ஆகவே, நம்முடைய மாநில அரசானது, அந்த மலைவாழ் மக்களுக்குரிய நலத் திட்டங்களைப் பெற்றுத் தருவதற்கு விரைவான நடவடிக்கையை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2003 மார்ச் 27]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் கூறியவாறு, தக்க நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெ. பழனியப்பன்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மொரப்பூர் தொகுதியில் சித்தேரி என்ற மலைக் கிராமம் உள்ளது. அந்த ஊராட்சி கிட்டத்தட்ட 62 கிராமங்களை உள்ளடக்கியதாகும். சித்தேரி மட்டுமல்லாமல், அங்கே வத்தல் மலையும் மலைக் கிராமமாக உள்ளது. அந்தப் பகுதிக்கு ஏதாவது பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டுமென்றால்கூட கழுதைமீது பொருட்களை ஏற்றி எடுத்துச் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் அந்தப் பகுதியில் செயல்படுத்தப்படவில்லை. ஆகவே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, நீலகிரி மாவட்டத்தை இந்தத் திட்டத்தில் சேர்த்ததுபோல, எங்களுடைய தருமபுரி மாவட்டத்தையும் சேர்த்து, அந்த மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் அல்ல; தருமபுரி மாவட்டத்தில் உள்ள மலைப் பகுதிகளை இந்த மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் கோரியவாறு அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 104, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

104—

கட்டட வசதி

***9860—திரு. ஏ.எஸ். கண்ணன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—